## பத்தாம்வகுப்பு – அரசுப்பொதுத்தேர்வு – மார்ச் 2019
## தமிழ் இரண்டாந்தாள்– தற்காலிக விடைக்குறிப்புகள்(ஆசிரியர்களுக்காக மட்டும்)
## TENTATIVE ANSWER KEY– (ONLY FOR TEACHERS) மதிப்பெண்கள் : 100

முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி, ஏழாயிரம்பண்ணை, விருதுநகர் மாவட்டம்.

பிரிவு – I (மதிப்பெண்கள் : 20)

| பகுதி – 1 | | 5 x 1 = 5 |
|---|---|---|
| உரிய விடையைத் தேர்ந்தெடுத்து, குறியீட்டுடன் எழுதுக. | | |
| 1 | (அ) ஒன்றரை | 1 |
| 2 | (ஆ) வைகை | 1 |
| 3 | (அ) அறிவினா | 1 |
| 4 | (அ) ஏழு | 1 |
| 5 | (இ) நிரை நேர் நேர் | 1 |

| பகுதி – 2 | | 5 x 1 = 5 |
|---|---|---|
| கோடிட்ட இடத்தை நிரப்புக | | |
| 6 | போல | 1 |
| 7 | கார்காலம் | 1 |
| 8 | நொச்சி (அல்லது) நொச்சித்திணை | 1 |
| 9 | அகவற்பா | 1 |
| 10 | பண்புப்பெயர்ப்புணர்ச்சி (அல்லது) மையீற்றுப் பண்புப்பெயர்ப்புணர்ச்சி | 1 |

| பகுதி – 3 | | 10 x 1 = 10 |
|---|---|---|
| சுருக்கமாக விடையளி | | |
| 11 | வல்லினம் மிகா இடம் – ஏற்புடைய விடை இருப்பின் மதிப்பெண் வழங்கவும் (ஒன்று மட்டும்) | 1 |
| 12 | சூரியன் சந்திரன் (அல்லது) ஞாயிறு திங்கள் (இவற்றின் வேறுபெயர்கள் இருப்பினும் பொருந்தும்) | 1 |
| 13 | தேன்தமிழ் | 1 |
| 14 | மருத்துவமனைக்கு அருகிலுள்ள தேநீரகத்திற்கு (தேநீர்க்கடைக்கு / தேநீரங்காடிக்கு / தேநீர்ச்சாலைக்கு / தேநீர்விடுதிக்கு) வா. | 1 |
| 15 | “அடேயப்பா! எவ்வளவு பெரிய ஏரி!” என்று தமிழமுதா வியந்தாள். உணர்ச்சித்தொடர்– (ஏற்புடைய விடை இருப்பின் மதிப்பெண் வழங்கவும்.) | 1 |
| 16 | 1. அணிகலன் / பொன்னகை / அணிமணி / ஆபரணம் / தங்கநகை<br>2. சிரிப்பு / முறுவல் / புன்னகை / புன்சிரிப்பு / நகைச்சுவை / புன்முறுவல்<br>(ஏற்புடைய விடை இருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | 1 |
| 17 | வந்து | 1 |
| 18 | இல்லாதவொன்று / (இல்லாத ஒன்று) | 1 |
| 19 | மயில் அகவ யானை பிளிறியது | 1 |
| 20 | “வாழ்க வாழ்க!” எனச் சான்றோர் வாழ்த்தினர். | 1 |

பிரிவு – II (மதிப்பெண்கள் : 10)

| எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் | | 5 x 2 = 10 |
|---|---|---|
| 21 | எட்டு வகைப்படும்.<br>சுட்டு, மறை, நேர், ஏவல், வினாவெதிர்வினாதல், உற்றதுரைத்தல், உறுவதுகூறல், இனமொழி. | 1<br>1 |



அ(ஜ)ச்சுதா

| | | |
|---|---|---|
| 22 | வந்தனள் = வா(வ) + த்(ந்) + த் + அன் + அள்<br>வா = பகுதி , 'வ' எனக்குறுகியது விகாரம் ;<br>த் = சந்தி , 'ந்' ஆனது விகாரம் ;<br>த் = இறந்தகால இடைநிலை ; அன் = சாரியை ;<br>அள் = படர்க்கை ஒருமை பெண்பால் வினைமுற்றுவிகுதி | 2 |
| 23 | பைந்தமிழ் = பசுமை + தமிழ்<br>பசு + தமிழ் (ஈறுபோதல் என்னும் விதிப்படி மை விகுதி கெட்டது)<br>பைசு + தமிழ் (அடியகரம் 'ஐ' ஆதல்)<br>பை + தமிழ் (இனையவும்)<br>பைந்தமிழ் (இனமிகல்) | 2 |
| 24 | எழுத்துகள் தமக்குரிய கால அளவிலிருந்து குறுகிஒலிப்பது குறுக்கமாகும்.<br>குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம். | 1<br>1 |
| 25 | பாலை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் : தெய்வம் – கொற்றவை;<br>மக்கள் – எயினர், எயிற்றியர்; உணவு – சூறையாடலால் வரும்பொருள்;<br>விலங்கு – வலியிழந்த யானை; பூ – குரவம், பாதிரி;<br>மரம் – இலுப்பை, பாலை; பறவை – புறா, பருந்து; ஊர் – குறும்பு;<br>நீர் – வற்றிய சுனை, கிணறு; பறை – துடி; யாழ் – பாலையாழ் ;<br>பண் – பஞ்சுரப்பண் ; தொழில் – வழிப்பறி, நிரைகவர்தல். | 2 |
| 26 | ஒருசொல், தன்பொருளையுங் குறித்து, தனக்கு இனமான பொருளையுங் குறித்து வருவது இனங்குறித்தலெனப்படும்.<br>எடுத்துக்காட்டு: அமுதயாழினி வெற்றிலை தின்றாள்.<br>(ஏற்புடைய பிற எடுத்துக்காட்டுகள் இருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | 1<br>1 |
| 27 | வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா | 2 |

பிரிவு – III (மதிப்பெண்கள் : 50)

| பகுதி – 1 | | |
|---|---|---|
| எவையேனும் இரண்டனுக்கு மட்டும் | | 2 x 5 = 10 |
| 28 | பாவகை குறள்வெண்பா.<br>வெண்பாவின் பொதுவிலக்கணம்பெற்று, இரண்டடிகளைக் கொண்டதாய், ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வருவது குறள்வெண்பா. | 2<br>3 |
| 29 | **இப்பாடலில் வஞ்சப்புகழ்ச்சி அணி பயின்று வந்துள்ளது.**<br>**அணி இலக்கணம்**<br>**புகழ்வதுபோலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி எனப்படும்.**<br>**அணி விளக்கம்**<br>**இப்பாடலில், தீயவர்களைத் தேவர்களுக்கு இணையாகப் புகழ்ந்து கூறுவதுபோலக் கூறித், தீயவர்கள் தம் மனம்போன போக்கில் தீய செயல்களைச் செய்து அழிவார்கள் எனப் பழித்துக் கூறப்பட்டுள்ளதால் இது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும்.**<br>**( அல்லது )**<br>**அணி இலக்கணம்**<br>செய்யுளில் முன்னர் வந்தசொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது, சொற்பொருள்பின்வருநிலையணி.<br>எ.கா – தீயவை தீய பயத்தலால் தீயவை<br>தீயினும் அஞ்சப் படும்<br>**அணி விளக்கம்**<br>இப்பாடலில், தீய என்னுஞ்சொல் தீமை என்னும் ஒரேபொருளில் பலமுறை வந்துள்ளது. எனவே, இது சொற்பொருள்பின்வருநிலையணி. | 1<br>2<br>2<br><br>2<br>1<br>2 |

| | | |
|---|---|---|
| | | |
| 30 | (table below) | 5 |

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| பீ / லிபெய் / | நேர் நிரை | கூவிளம் |
| சா / கா / டும் / | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| அச் / சிறும் / | நேர் நிரை | கூவிளம் |
| அப் / பண் / டம் / | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| சா / ல / | நேர் நேர் | தேமா |
| மிகுத் / துப் / | நிரை நேர் | புளிமா |
| பெயின் | நிரை | மலர் |

| பகுதி – 2 | | |
|---|---|---|
| எவையேனும் இரண்டனுக்கு மட்டும் | | 2 x 5 = 10 |
| 31 | முன்னுரை | 1 |
| 32 | பொருளுரை | 3 |
| 33 | முடிவுரை<br>வினாவிற்கேற்ற விடையிருப்பின் (பத்திவாரியாக) மதிப்பெண் வழங்கவும் | 1 |

| பகுதி – 3 | | 3 + 2 = 5 |
|---|---|---|
| கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. | | |
| 34(அ) | யாழினி! என்னுடைய மடிக்கணினியில் விண்ணப்பத்தை/ (வேண்டுகோளை) / (படிவத்தை)ப் பதிவிறக்கி நிரப்பி / (பூர்த்திசெய்து) என் மின்னஞ்சலுக்கு அனுப்பு. (வேறு பொருத்தமான விடை இருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | 3 |
| (ஆ) | 1876 – கஅஎகூ | ½ |
| | 39 – ௩கூ | ½ |
| | 124 – கஉச | ½ |
| | 510 – ருக0 | ½ |

| பகுதி – 3 | | 3 + 2 = 5 |
|---|---|---|
| கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க. | | |
| 35(அ) | கலைகளுளொன்று கடிதமெழுதுதல் / கடிதமெழுதுதல் ஒரு கலை கலைகளுளொன்று கடிதமெழுதுவது. தொடர்ச்சியான பயிற்சியினால் இதை முறைப்படுத்தலாம். நமது உறவினை நண்பர்கள் உறவினர்களுடன் தொடர்வதற்கும், இன்றியமையாத தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் நாம் கடிதமெழுதுகிறோம். உரையாடலின் ஒருவகை வடிவமே கடிதங்கள். ஏனென்றால், அவை இருவேறு மக்களுக்கிடையேயான தனித்த, நேரடியான தொடர்பினுக்குத் தலைப்படுகின்றன. எனவே, ஒவ்வொரு படித்த மானுடரும் தெளிவானதும் படிக்கக்கூடியதுமான ஒரு கடிதத்தை எவ்வாறு எழுதுவதெனத் தெரிந்திருதல்வேண்டும்.<br>(ஏற்புடைய பொருத்தமான பிற மொழிபெயர்ப்பு இருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | 3 |
| (ஆ) | கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகள் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.<br>(i) பழைமை பொன் போன்றது.<br>(ii) பேராசை பெருநட்டம்.<br>(iii) முள்ளை முள்ளால் எடு.<br>(iv) நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும். | 1 + 1 |

| | | |
|---|---|---|
| 35 | செவிமாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மாற்று வினா.<br>(i) அமெரிக்கா<br>(ii) இசை / இசைத்துறை<br>(iii) இழந்த சொர்க்கம்<br>(iv) உள்ளத்தில் இருக்கவேண்டும்<br>(v) முடியும் | <br>1<br>1<br>1<br>1<br>1 |

| பகுதி – 4 | | 1 x 5 = 5 |
|---|---|---|
| கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. | | |
| 36(அ)<br><br>(ஆ) | பொருத்தமான சூழலில் கதையை நிறைவு செய்தல்<br>பொருத்தமானதலைப்பு<br>(அல்லது)<br>‘நிலா’ அல்லது ‘என் கனவு’ என்ற தலைப்பில் எட்டு வரிகளில் பொருத்தமான கவிதை (மரபுக்கவிதை அல்லது புதுக்கவிதை) எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கவும். | 4<br>1<br><br>5 |

| பகுதி – 5 | | 1 x 5 = 5 |
|---|---|---|
| கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. | | |
| 37 | பாடலின் திரண்ட கருத்தினை எழுதி,<br>மையக்கருத்து, சொல்நயம், பொருள் நயம், எதுகை நயம், மோனை நயம், இயைபு நயம், அணி நயம் போன்ற ஏற்புடைய நயங்கள் ஏதேனும் ஐந்து எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும். | 5 |

| பகுதி – 6 | | 1 x 5 = 5 |
|---|---|---|
| கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. | | |
| 38 | வங்கியின் பெயர் – கனரா வங்கி<br>இடம்<br>நாள்<br>சேமிப்புக் கணக்கு எண்<br>பெயர் – கபிலன்<br>பத்தாயிரம் மட்டும்<br>தொகை ரூ. 10000/–<br>கபிலன் எனக் கையொப்பமிடல்<br>[பொருத்தமான இடத்தில் மேற்கண்ட விபரங்கள் மிகச் சரியாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்] | ½<br>½<br>½<br>½<br>1<br>½<br>½<br>1 |

| பகுதி – 7 | | 1 x 5 = 5 |
|---|---|---|
| கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. | | |
| 39(அ) | (i) அன்பாகப் பழகுவான் / இனிமையாகப் பேசுவான் / கோபம் கொண்டதில்லை (இவற்றுள் ஏதேனும் ஒன்று).<br>(ii) பொருத்தமான விடை இருப்பின் மதிப்பெண் வழங்கவும்.<br>(iii) “எல்லோரும் அமுதனைப்போல நடந்துகொள்ளுங்கள்!”. | 1<br><br>1<br>1 |
| (ஆ) | (i) பொருத்தமான விடை இருப்பின் மதிப்பெண் வழங்கவும்.<br>(ii) பொருத்தமான விடை இருப்பின் மதிப்பெண் வழங்கவும். | 1<br>1 |
| | | |

| | | |
|---|---|---|
| | பிரிவு – IV<br>பகுதி – 1 | (மதிப்பெண்கள் : 20) |
| | ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க. | 1 x 10 = 10 |
| 40 | கடிதத்தின் தலைப்பு | |
| (அ) | அனுப்புநர் | 1 |
| | பெறுநர் | 1 |
| | விளித்தல் | ½ |
| | பொருள் (குளங்களைத் தூர்வார வேண்டி) | 1 |
| | 1. கடிதம் எழுதப்படும் நோக்கம்<br>2. அக்குறைகளால் மக்களுக்கு ஏற்படும் துன்பம்.<br>3. குறைபாடு நீக்கப்பட்டால் மக்களுக்கு ஏற்படும் நன்மை. | 4 |
| | தங்கள் உண்மையுள்ள | ½ |
| | இடம், தேதி | 1 |
| | உறைமேல் முகவரி | 1 |
| | ( அல்லது ) | |
| (ஆ) | நண்பனுக்குக் கடிதம் | |
| | இடம், நாள் | 1 |
| | விளித்தல் | 1 |
| | செய்தி | 4 |
| | தங்கள் அன்புள்ள | 1 |
| | கையொப்பம் | 1 |
| | உறைமேல் முகவரி | 2 |

| | | | |
|---|---|---|---|
| | பகுதி – 2 | | |
| | ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க. | | 1 x 10 = 10 |
| 41 | தலைப்பு, குறிப்புச்சட்டகம் | 1 மதிப்பெண் | |
| | முன்னுரை | 1 மதிப்பெண் | |
| | பொருளுரை | 4 மதிப்பெண்கள் | |
| | மேற்கோள் | 1 மதிப்பெண் | |
| | உள் தலைப்புகள் | 2 மதிப்பெண்கள் | |
| | முடிவுரை | 1 மதிப்பெண் | |
| (அ) | சிக்கனமும் சேமிப்பும் | | 10 |
| (ஆ) | தமிழ்மொழி | | 10 |
| | | | |




என்றென்றும் மாணவர்நலனில் ……

முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி, தமிழாசிரியர்,

ஏழாயிரம்பண்ணை – 626 201,

விருதுநகர் மாவட்டம்.

வலைப்பூ: annaachi7k.blogspot.com